# தேச பக்தி
DHESA BAKTHI

நடுநிலை காலை நாளிதழ்

RNI.No.TNTAM/2022/86012

ஆசிரியர் : G. ராஜா 9842364068 இணைஆசிரியர் : R. கண்ணன் 9994422779

★மலர்:05 ★இதழ்: 092 ★03.08.2026 ★தமிழ் நாளிதழ் ★திங்கட்கிழமை ★பக்கம்-4 ★விலை.ரூ.5/- சென்னை

★Volume:05 ★Issue:092 ★03.08.2026 ★TamilDaily ★Monday ★Page-4 ★Price-₹5/- Chennai






காவிரி விவகாரம்:

## முதல்அமைச்சர் வாய் திறந்தால் பலருக்கு ஆபத்து

### அமைச்சர் செங்கோட்டையன்

காவிரி விவகாரத்தில் முதல்அமைச்சர் விஜய் வாய் திறந்தால் பலருக்கு ஆபத்து வருகிறது, அதனால் அவர்வாய்திறப்பதில்லை எனஅமைச்சர் செங்கோட்டையன் கூறியுள்ளார்.

அனைத்துக் கட்சிக் கூட்டம் தேவையில்லை எனத் திமிராகப் பேசியுள்ள 'கட்சித் தாவல் வல்லுநர்' நிர்மல் குமார்

காவிரி தொடர்பாகத் தமிழ்நாட்டின் முதல்அமைச்சர் உறக்கம் கலைத்து திருவாய் மலர்வது எப்போது? என

முன்னாள் அமைச்சர் ரகுபதி கேள்வி எழுப்பி உள்ளார். இதற்கு பதிலடி கொடுக்கும் வகையில், ஈரோடு கோபி செட்டி பாளையத்தில் அமைச்சர் செங்கோட்டையன் செய்தியாளர் சந்திப்பில் கூறியதாவது:

காவிரி நீர் விவகாரத்தில் தமிழகத்தில் எல்லாரையும் ஒருங்கிணைத்து தான் பணிகளை மேற்கொண்டு வருகிறோம். அதில் கருத்து வேறுபாடுகள் இல்லை.

அண்டை மாநிலத்தில் அனைத்துக் கட்சிக் கூட்டம் கூட்டப்பட்டு இருக்கிறது என்பதை உதாரணம் காட்டி, எங்களிடத்தில் கேள்வி கேட்பதைக் காட்டிலும், எல்லோரும் ஒருங்கிணைந்து டெல்டா விவசாயிகளை வாழ வைக்க வேண்டும் என்பது எல்லோருடைய கனவு.

அந்த கனவு நிறைவேறும் காலம். வெற்றிகரமாக நேற்று துவங்கப்பட்டு உள்ளது. நல்ல ஒரு முதல்அமைச்சர் நமக்கு கிடைத்து உள்ளார். அந்த காலம் பொற்காலமாக அமையும்.

முதல்அமைச்சர் விஜய் வாய் திறந்தால் பலருக்கு ஆபத்து வருகிறது. அதனால் தான் அவர் வாய் திறப்பது இல்லை.

வேளாண்மைக்கு என தனி பட்ஜெட் தாக்கல் ஆக உள்ளது. அதில் அவர்களின் நலன்களுக்கான அனைத்து திட்டங்களும் இடம்பெறும்.

இவ்வாறு அவர் கூறினார்.

## டெல்லி சென்ற, தமிழக விவசாயிகளை நாக்பூரிலேயே தடுத்து நிறுத்தியது யார்?

### வேல்முருகன் கேள்வி

டெல்லி சென்ற, தமிழக விவசாயிகளை நாக்பூரிலேயே தடுத்து நிறுத்தியது யார்? என்று வேல்முருகன் கேள்வி எழுப்பியுள்ளார். இது தொடர்பாக, தமிழக வாழ்வுரிமைக் கட்சி தலைவர் வேல்முருகன் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் தெரிவித்திருப்பதாவது:

டெல்லி சென்ற, தமிழக விவசாயிகளை நாக்பூரிலேயே தடுத்து நிறுத்தியது யார்?

தமிழக உரிமைகள் மீது தாக்குதல் நடந்தும், தமிழக அரசு அமைதியாக இருப்பது ஏன்?



கோரிக்கை

டெல்லியில் காவிரி உரிமை உள்ளிட்ட தமிழ்நாட்டு விவசாயிகளின் கோரிக்கைகளை வலியுறுத்தி அமைதியான முறையில் போராடச் சென்ற தமிழக விவசாயிகளை, மராட்டிய மாநிலத்தின் நாக்பூரில் மராட்டிய காவல்துறையினர், ரெயிலிலிருந்து கட்டாயமாக இறக்கி, அவர்களை தமிழகத்திற்கு திருப்பி அனுப்பியிருப்பது மிகக் கடுமையாக கண்டிக்கத்தக்க, சனநாயக விரோத செயலாகும்.

தாக்குதல்

இந்திய அரசியலமைப்பு, நாட்டின் எந்த மாநிலத்திற்கும் சென்று தங்களது கருத்துகளை அமைதியான முறையில் வெளிப்படுத்தும் உரிமையை ஒவ்வொரு குடிமகனுக்கும் வழங்கியுள்ளது. அந்த அடிப்படை உரிமையையே பறிக்கும் வகையில் தமிழக விவசாயிகள் தடுத்து நிறுத்தப்பட்டிருப்பது, விவசாயிகளின் உரிமைகள் மீது மட்டுமல்ல, தமிழ்நாட்டின் உரிமைகள் மீதும் நடத்தப்பட்ட தாக்குதலாகும்.

குற்றவாளிகள் அல்ல

தமிழக விவசாயிகள் குற்றவாளிகள் அல்ல. தங்களது வாழ்வாதாரத்தையும், காவிரி உரிமையையும் காக்க சனநாயக வழியில் போராட சென்றவர்கள். அவர்களை வழிமறித்து சொந்த மாநிலத்திற்கே திருப்பி அனுப்பியிருப்பது கூட்டாட்சி தத்துவத்திற்கும், சனநாயக மாண்பிற்கும் எதிரான செயல்.

நடவடிக்கை

இந்த விவகாரத்தை தமிழக அரசு சாதாரண நிகழ்வாக கருதி வேடிக்கை பார்க்கக்கூடாது. உடனடியாக மராட்டிய அரசிடம் கடும் கண்டனத்தை பதிவு செய்ய வேண்டும். மேலும், மத்திய அரசின் கவனத்திற்கு இந்த அநீதியை கொண்டு சென்று, இனி இதுபோன்ற சம்பவங்கள் நடைபெறாத வகையில் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

விவசாயிகளின் உரிமை

தமிழக விவசாயிகளின் சனநாயக உரிமையை பறித்த மராட்டிய காவல்துறையின் நடவடிக்கையை, தமிழக வாழ்வுரிமைக் கட்சி மிக வன்மையாகக் கண்டிக்கிறது. விவசாயிகளின் உரிமையை பாதுகாப்பதிலும், தமிழ்நாட்டின் உரிமையை நிலைநாட்டுவதிலும் தமிழக அரசு உடனடியாக உறுதியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் சார்பில் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# காமன்வெல்த் விளையாட்டு போட்டி: தங்கம் வென்ற பிரீத்திக்கு பிரதமர் மோடி வாழ்த்து

2026 காமன்வெல்த் விளையாட்டு போட்டிகளில் பெண்களுக்கான 54 கிலோ குத்துச்சண்டை பிரிவில் தங்கப் பதக்கம் வென்ற பிரீத்திக்குப் பிரதமர் நரேந்திர மோடி வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

குத்துச்சண்டை

ஸ்காட்லாந்தின் கிளாஸ்கோ நகரில் 2026 காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருகின்றன. இதில் பெண்களுக்கான 54 கிலோ எடைப் பிரிவு குத்துச்சண்டை இறுதிப்போட்டி நடைபெற்றது.

விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த இறுதிப் போட்டியில், இந்தியாவின் இளம் புயல் பிரீத்தி பவார், கனடா வீராங்கனை ஸ்கார்லெட் டெல்கடோவை எதிர்கொண்டார்.

முதல் தங்க பதக்கம்

போட்டியின் தொடக்கம் முதலே மின்னல் வேக குத்துகளை பறக்க விட்ட பிரீத்தி, 50 என்ற



கணக்கில் எதிராளியை நிலைகுலைய செய்து, தங்கப் பதக்கத்தை கைப்பற்றினார். இது இந்த காமன்வெல்த் தொடரில் இந்தியக் குத்துச்சண்டை அணிக்குக் கிடைத்த முதல் தங்க பதக்கமாகும்.

இதுகுறித்து சமூக ஊடக எக்ஸ்தளத்தில் பிரதமர் நரேந்திர மோடி வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது:

"காமன்வெல்த் பெண்களுக்கான 54 கிலோ குத்துச்சண்டை பிரிவில் தங்கம் வென்ற பிரீத்திக்கு வாழ்த்துகள்.

அவர்சிறப்பானசெயல்பாட்டை வெளிப்படுத்தியுள்ளார். வரும் காலங்களில் அவர் தொடர்ந்து வெற்றி பெற வாழ்த்துகிறேன்."

இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

கிருஷ்ணகிரியில்

## மாங்கனி கண்காட்சியில் மக்களை கவர்ந்த நாய்கள்

கிருஷ்ணகிரியில் உலகப் புகழ்பெற்ற 32வது அகில இந்திய மாங்கனி கண்காட்சி அரசு ஆடவர் கலைக்கல்லூரி மைதானத்தில் மிக பிரம்மாண்டமாக நடைபெற்று வருகிறது.

பாரம்பரிய நாய் கண்காட்சி

இதன் ஒரு பகுதியாக நேற்று பொதுமக்கள் மற்றும் நாய் வளர்ப்போர்களை கவரும் வகையில் அரிய வகை மற்றும் பாரம்பரிய நாய் கண்காட்சி நடைபெற்றது. இதையொட்டி தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்கள் மற்றும் அண்டை மாநிலங்களில் இருந்து நூற்றுக்கும் மேற்பட்ட நாய்கள் இந்த போட்டியில் பங்கேற்க அழைத்து வரப்பட்டன.



அணிவகுத்த நாய்கள்

இந்த கண்காட்சியில் தமிழ்நாட்டின் பாரம்பரிய நாய் இனங்களான ராஜபாளையம், சிப்பிப்பாறை, கன்னி மற்றும் கோம்பை ஆகிய நாய்கள் கம்பீரமாக வலம் வந்து பார்வையாளர்களை வியப்பில் ஆழ்த்தின. அதே போல் ஜெர்மன் ஷெப்பர்ட், ராட்வைலர், கிரேட் டேன், பக், லேப்ரடார் மற்றும் வெளிநாட்டை சேர்ந்த அரிய வகை அக்கிடா உள்ளிட்ட பல நாய் இனங்களும் இதில் பங்கேற்றன.

பொதுமக்கள் கைதட்டி ஆரவாரம்

கால்நடை பராமரிப்புத் துறை சார்பில் அனைத்து நாய்களுக்கும் மருத்துவ பரிசோதனை செய்யப்பட்டு, தடுப்பூசி சான்றிதழ்கள் சரிபார்க்கப்பட்ட பின்னரே மைதானத்திற்குள் அனுமதிக்கப்பட்டன. போட்டியில் பங்கேற்ற நாய்கள், அதன் உரிமையாளர்கள் இட்ட கட்டளைகளுக்கு கீழ்ப்படிந்து சாகசங்களை செய்து காட்டின. இதைப் பார்த்து மைதானத்தில் கூடியிருந்த குழந்தைகள், பெண்கள் உள்ளிட்ட ஆயிரக்கணக்கான பொதுமக்கள் கைதட்டி ஆரவாரம் செய்தனர்.

பரிசுகள்

இதனை தொடர்ந்து, பல்வேறு பிரிவுகளின் கீழ் சிறப்பாக செயல்பட்ட மற்றும் சிறந்த முறையில் பராமரிக்கப்பட்ட நாய்களின் உரிமையாளர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்களும், சுழற்கோப்பைகளும், பரிசுகளும் வழங்கி கௌரவிக்கப்பட்டன.

மாங்கனி கண்காட்சிக்கு வந்த பொதுமக்களை இந்த நாய் கண்காட்சி பெரிதும் கவர்ந்தது.



காஞ்சிபுரத்தில் உள்ள இருங்காட்டுக் கோட்டை, ஸ்ரீபெரும்புதூர், ஒரகடம் பகுதியில் உள்ள தொழிற்சாலைகளை விஜய் பார்வையிடுகிறார் முதலமைச்சர் விஜய்.





விடுமுறையை முன்னிட்டு

## தஞ்சை பெரிய கோவிலில் குவிந்த சுற்றுலா பயணிகள்

தொடர் விடுமுறையை முன்னிட்டு, உலகப் புகழ்பெற்ற தஞ்சை பெரிய கோவிலில் பல்லாயிரக்கணக்கான சுற்றுலா பயணிகளும் பக்தர்களும் குவிந்துள்ளனர்.

ஆயிரம் ஆண்டுகள் பழமையான சோழர் காலத்து கட்டிடக்கலை, நுணுக்கமான சிற்பக்கலை மற்றும் கோவிலின் பிரம்மாண்ட அழகை பொதுமக்கள் வியப்புடன் ரசித்தனர். மேலும், சுவாமி தரிசனம் செய்வதற்காக பொதுமக்கள் நீண்ட வரிசையில் காத்து நின்று சாமி தரிசனம் செய்தனர்.

உள்ளூர் மக்கள் மட்டுமின்றி, வெளி மாவட்டங்கள் மற்றும் பிற மாநிலங்களில் இருந்தும் ஏராளமானோர் வருகை தந்துள்ளதால் கோவில் வளாகம் முழுவதும் மக்கள் கூட்டத்தால் நிறைந்து காணப்படுகிறது. பக்தர்களின் வசதிக்காகவும், கூட்ட நெரிசலைக் கட்டுப்படுத்தவும் கோவில் நிர்வாகமும் காவல் துறையினரும் இணைந்து பலத்த பாதுகாப்பு மற்றும் சிறப்பு ஏற்பாடுகளைச் செய்துள்ளனர்.

## தமிழக விவசாயிகளை இறக்கிவிட்டது அநீதி: அன்புமணி

காவிரி நீர் பிரச்னைகளை கண்டித்து டெல்லியில்போராட்டம்நடத்தசென்ற தமிழ்நாடு விவசாயிகளை, மகாராஷ்டிரா அரசு நடுவழியில் நிறுத்தி அவர்களைதிருப்பிஅனுப்பியசம்பவத்திற்கு தமிழ்நாடு அரசு விளக்கம் கோர வேண்டும் என பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ளசமூக வலைத்தளப் பதிவில் தெரிவித்திருப்பதாவது:

காவிரி நீர் பிரச்சினை, மேகதாது அணை விவகாரம் ஆகியவற்றில் தமிழகத்திற்கு இழைக்கப்படும் அநீதி, மத்திய நீர்வள அமைச்சகத்தின் ஒரு சார்பான நிலைப்பாடு ஆகியவற்றைக் கண்டித்து டெல்லியில் நாளை மறுநாள் மத்திய நீர்வள அமைச்சகத்தை முற்றுகையிட்டு போராட்டம் நடத்துவதற்காக தொடர்வண்டி மூலம் சென்ற காவிரி பாசன மாவட்ட விவசாயிகள் சங்கங்களைச் சேர்ந்தவர்களை மராட்டிய மாநிலம் நாக்பூரில் அம்மாநில காவல்துறையினர் தடுத்தி நிறுத்தி இறக்கிவிட்டதுடன், அவர்களைவலுக் கட்டாயமாக தமிழ்நாட்டுக்கு திருப்பி அனுப்பியுள்ளனர். தமிழக உழவர்கள் மீதான இந்த அடக்குமுறை அநீதியானது; கண்டிக்கத்தக்கது.

மனித உரிமை மீறல்



மேகதாது விவகாரத்தில் தமிழகத்திற்கு இழைக்கப்படும் அநீதியைக் கண்டித்து போராட்டம் நடத்தும் அனைத்து உரிமைகளும் தமிழக விவசாயிகளுக்கு உண்டு. அவர்களின் போராட்டத்தைத் தடுப்பதற்காக அவர்களை மராட்டிய காவல்துறை தடுத்து நிறுத்தி இறக்கி விட்டது மனித உரிமை மீறல் ஆகும்.

அதுமட்டுமின்றி, இது தமிழ்நாட்டின் உரிமைகள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் ஆகும். இதை தமிழ்நாடு அரசு வேடிக்கைப் பார்க்கக் கூடாது. டெல்லிக்கு தொடர்வண்டியில் பயணம் செய்த விவசாயிகளை எதற்காக தடுத்து நிறுத்தினார்கள் என்று மராட்டிய அரசிடமும், காவல்துறையிடமும் தமிழக அரசு விளக்கம் கேட்க வேண்டும். அத்துமீறிய இந்த செயலுக்காக மராட்டிய அரசை கடுமையாக கண்டிக்க வேண்டும்.

# இந்தியாவின் முதல் முழுமையான டிஜிட்டல் மக்கள் தொகை கணக்கெடுப்பு

## திருவண்ணாமலையில் வீட்டுப் பட்டியல் கணக்கெடுப்பை தொடங்கி வைத்தார் ஆட்சியர் வந்தனா கார்க்

இந்தியாவில் முதல்முறையாக முழுமையான டிஜிட்டல் முறையில் நடைபெறும் மக்கள் தொகை கணக்கெடுப்பு–2027 பணியின் ஒரு பகுதியாக, திருவண்ணாமலை மாவட்டத்தில் வீட்டுப் பட்டியல் மற்றும் வீடுகள் கணக்கெடுப்புப் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் வந்தனா கார்க் சனிக்கிழமை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.



திருவண்ணாமலை வட்டத்திற்குட்பட்ட இனாம்கரியந்தல் ஊராட்சியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்ட ஆட்சியர், கணக்கெடுப்பாளர்கள் வீடு தோறும் சென்று தகவல்களை பதிவு செய்யும் பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

மக்கள் தொகை கணக்கெடுப்பு–2027, நாட்டின்முதல்முழுமையான டிஜிட்டல் கணக்கெடுப்பாக நடைபெறுகிறது. இதன் முதற்கட்டமாக கடந்த ஜூலை 17 முதல் 31ஆம் தேதி வரை சுயகணக்கெடுப்பு (SELF ENUMERATION) நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து, ஆகஸ்ட் 1 முதல் 31ஆம் தேதி வரை திருவண்ணாமலை மாவட்டம் முழுவதும் வீட்டுப் பட்டியல் மற்றும் வீடுகள் கணக்கெடுப்புப் பணிகள் நடைபெறுகின்றன.

இந்தப் பணிக்காக மாவட்டத்தில் 12 வட்டாட்சியர்கள், ஒரு மாநகராட்சி ஆணையாளர், 5 நகராட்சி ஆணையாளர்கள் மற்றும் 8 பேரூராட்சி செயல் அலுவலர்கள் பொறுப்பு அலுவலர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

மேலும், 3,733 கணக்கெடுப்பு பகுதிகள் உருவாக்கப்பட்டு, 3,502 கணக்கெடுப்பாளர்கள் மற்றும் 571 மேற்பார்வையாளர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

வீட்டுப் பட்டியல் கணக்கெடுப்பு துல்லியமாகவும், காலக்கெடுவிற்குள் நிறைவடையவும் அனைத்து அலுவலர்களும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் அறிவுறுத்தினார்.

இந்நிகழ்வில் மாவட்ட வருவாய் அலுவலர் அ. சிவசுப்பிரமணியன், திருவண்ணாமலை வருவாய் கோட்டாட்சியர் செல்வம், திருவண்ணாமலை வட்டாட்சியர் மோகன்ராமன் மற்றும் பல்வேறு துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



பழனி நகராட்சியில், கடந்த ஒரு வார காலமாக, 25வது வார்டு பட்டத்து விநாயகர் கோவில் சாலை தெரு விளக்குகள் எரியவில்லை. மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க அதிகாரியிடம் பலமுறை கூறியும் இதுவரை எந்த நடவடிக்கையும் இல்லை. ஆகையால் ஜென்னத்துல் ஃபிர்தௌஸ் ராஜா முஹம்மது நகர்மன்ற உறுப்பினர் தன்னுடைய சொந்தச் செலவில், 5 கம்பத்திற்கு போக்கஸ் லைட் அமைத்தார். அவ்வார்டு மக்கள் பாராட்டி வருகின்றனர்





தென்காசி வனக்கோட்டத்தில் இரவு நேர யானை, வனவிலங்குகள் நடமாட்டம் மற்றும் வேட்டை குறித்த தகவல் அளிக்க இரவு ரோந்து பணியாளர்கள் விவரங்கள் வழங்கப்பட்டுள்ளது . பொதுமக்கள் ஏதேனும் தகவல்கள் இருந்தால் தகவல் தெரிவிக்கலாம்.மேலே உள்ள மாவட்ட கட்டுப்பாட்டு அறை எண்ணிற்கும் தகவல் தெரிவிக்கலாம்



# திண்டுக்கல் அருகே கத்தியுடன் சுற்றித்திரிந்த வாலிபர் கைது

திண்டுக்கல், தாலுகா காவல் நிலைய ஆய்வாளர் உலகநாதன் தலைமையில் சார்பு ஆய்வாளர் சக்திவேல் மற்றும் காவலர்கள் ரோந்துபணியில் ஈடுபட்டு இருந்தது

திண்டுக்கல் வத்தலகுண்டு பைபாஸ் TO பழனி பைபாஸ் செல்லும் சாலையில் கத்தியுடன் சுற்றி திரிந்த பொன்னிமாந்துறை, புதுப்பட்டியை சேர்ந்த அன்பழகன்(எ)காடு அன்பழகன்(26) என்பவரை போலீசார் கைது செய்து வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

### வடதின்னலூரில் கட்டி முடிக்கப்பட்டு 2 ஆண்டுகள் ஆகியும்

# பயன்பாட்டிற்கு வராத மேல் நிலை நீர் தேக்க தொட்டியை பயன்பாட்டிற்கு கொண்டு வர எம் எல் ஏ நடவடிக்கை



திருவண்ணாமலை மாவட்டம் செய்யாறு அருகே அனக்காவூர் ஒன்றியம் வடதின்னலூரில் சுமார்400க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றனர். இந்நிலையில் 30 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட 18 லட்சத்து 42 ஆயிரம் ரூபாய் மதிப்பில் கட்டி முடிக்கப்பட்டு 2 ஆண்டுகள் ஆகியும் பயன்பாட்டிற்கு வராத மேல் நிலை நீர் தேக்க தொட்டியை பயன்பாட்டிற்கு கொண்டு வர எம் எல் ஏ முக்கூர் சுப்பிரமணியன் நேரில் ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்க வட்டார வளர்ச்சி அலுவலக பணியாளர்களுக்கு ஆலோசனை வழங்கினார். நிகழ்ச்சியில் துணை வட்டார வளர்ச்சி அலுவலர் மோகன், உதவி பொறியாளர் தயாளன் , ஒன்றிய செயலாளர்கள் துரை அரங்கநாதன், வயலூர் ராமநாதன், சிவராஜ் மற்றும் நகர செயலாளர் வெங்கடேசன், அதிமுக நிர்வாகிகள் தசரதன், தாமரை கண்ணன், பெருமாள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



### பொள்ளாச்சி அருகே லாரி கார் மோதி விபத்து:

# ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் உள்பட 5 பேர் உயிரிழப்பு

பொள்ளாச்சி அருகே நின்று கொண்டிருந்த லாரி மீது கார் மோதியதில் காரில் பயணம் செய்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 4 பேர் மற்றும் நண்பர் என மொத்தம் ஐந்து பேர் சம்பவ இடத்திலேயே உடல் நசுங்கி உயிரிழந்தனர்.

கோவை மாவட்டம் மதுக்கரை எம்எல்ஏ வீதியை சேர்ந்தவர் கனகராஜ் (45) தனியார் நிறுவனத்தில் பணி புரிந்து வந்தார். இவரது மனைவி பூரணி என்கின்ற உமா மகேஸ்வரி (39) இவர்களது மகள்கள் ஆர்த்தி (25) பிசியோதெரபிஸ்ட் படிப்பு முடித்து விட்டு வேலைக்கு சென்று வந்துள்ளார். இளைய மகள் நர்மதா (20) நேரு கல்லூரியில் பிசியோதெரபி ஸ்ட் மூன்றாம் ஆண்டு படித்து வந்துள்ளார்.

இவர்களது தூரத்து உறவினரான ராமன் (35) ஆகியோருடன் ஒரே காரில் கனகராஜ் குடும்பத்தினர் இன்று உடுமலை அருகே உள்ள ஒரு குல தெய்வம் கோயிலுக்கு சென்று விட்டு மதியம் வீடு திரும்பிக் கொண்டு இருந்தனர். காரை கனகராஜ் ஓட்டி வந்துள்ளார். பொள்ளாச்சி அருகே நல்லாம்பள்ளி அருகே வந்து கொண்டிருந்தபோது எதிர்பாராதவிதமாக சாலையோரம் நின்று கொண்டிருந்த லாரியின் மீது கார் மோதியது.

இதில் கார் சுக்கு நூறாக நொறுங்கியதில் சம்பவ இடத்திலேயே 5 பேரும் உடல் நசுங்கி உயிரிழந்தனர். தகவல் அறிந்து சம்பவ இடத்திற்குச் சென்ற கோமங்கலம் போலீஸார் மீட்பு பணியில் ஈடுபட்டனர். உயிரிழந்த ஐந்து பேரின் சடலங்களும் மீட்கப்பட்டு பிரேத பரிசோதனைக்காக பொள்ளாச்சி அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டது. இது தொடர்பாக கோமங்கலம் போலீஸார் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# 15 கோடி மோசடி வழக்கில் மேலும் ஒருவர் கைது



பழனியை தலைமையிடமாகக் கொண்டு தனியார் நிதி நிறுவனம் செயல்பட்டது. அதில் பணத்தை முதலீடு செய்வோருக்கு ஊக்கத் தொகை, தங்க நாணயத்துடன் அசல் தொகை முழுமையாக திருப்பி கொடுப்பதாக அறிவிக்கப்பட்டது.

அதை உண்மை என நம்பி மதுரை, கோவை, திண்டுக்கல் உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்தவர்கள் ரூ.15 கோடி முதலீடு செய்தனர்.

ஆனால் முதலீட்டாளர்களுக்கு ஊக்கத்தொகை வழங்கப்படவில்லை என்று கூறப்படுகிறது.அதோடு நிறுவனமும் மூடப்பட்டதால் பாதிக்கப்பட்ட நபர்கள், திண்டுக்கல் பொருளாதார குற்றப் பிரிவு போலீசில் புகார் அளித்தனர். அதன்பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து நிறுவனத்தின் நிர்வாகி செந்தில்குமார் உட்பட 4 பேரை ஏற்கனவே கைது செய்துவிட்டனர். அதே நேரம் வழக்கில் தொடர்புடைய பழனியைச் சேர்ந்த சக்திவேல் (வயது 35) என்பவர் தலைமறைவாக இருந்தார்.

இந்த நிலையில் அவர் திருச்செந்தூரில் பதுங்கி இருப்பது தெரியவந்தது. இதையடுத்து போலீசார் அங்கு சென்று அவரை கைது செய்தனர்.



திருவண்ணாமலை மாவட்டம் செய்யாறு வேணுகோபால் திருமண மண்டபத்தில் 01.08 2026 சனிக்கிழமை காலை 10.00 மணியளவில் ஆகத்து 172026 அன்று எழுச்சித் தமிழர் பிறந்த நாள் தமிழர் எழுச்சி நாள் உளுந்தூர்பேட்டையில் தமிழ்தேசிய எழுச்சி மாநாடு குறித்து மாவட்ட செயற்குழு கூட்டம் கா.செல்வம் மாவட்ட பொருளாளர் தலைமையிலும் எ.குப்பன்(எ) வெற்றிவளவன் மண்டல துணைச்செயலாளர் முன்னிலையிலும் த.அஜித்குமார் நகர அமைப்பாளர் (இசிஎபா) வரவேற்பிலும் நடைபெற்றது. கூட்டத்தில் எழுச்சித் தமிழரின் பிறந்தநாள் மற்றும்தமிழ்தேசியஎழுச்சிமாநாடுகுறித்தும்தீர்மானம்நிறைவேற்றப்பட்டது. இறுதியாக ஆ.பெ.அம்பேத்கார் நன்றியுரை ஆற்றினார். இந்நிகழ்வில் சா. எரேமியா தானியேல், சொ.பகலவன், மு.சேகர், ம.காளிமுத்து க.பூபாலன், வெ.வரதன், வழ.க.அருள்தாஸ், ஆ.நாகாவளவன், மா.வெங்கடேசன், ம.செல்வி உள்பட 75க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.



திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் நகரில் போக்குவரத்து நெரிசலை கட்டுப்படுத்தவும் பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்யவும் திண்டுக்கல் மாவட்ட கண்காணிப்பாளர் ஜெயக்குமார் தலைமையில் உயர் அதிகாரிகள் திடீர் நடைபயணம் ரோந்து மேற்கொண்டனர்







கொடைக்கானல் மேல்மலை கிராமமான பூம்பாறையில், ராமன் என்பவர் வெட்டிப் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்த சம்பவத்திற்கு கண்டனம் தெரிவித்து, உண்மையான குற்றவாளிகளை உடனடியாக கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும் என்று வலியுறுத்தி, பூம்பாறை கிராம மக்கள் சாலை மறியல்போராட்டத்தில்ஈடுபட்டனர்.இதனால்அப்பகுதியில்போக்குவரத்து பாதிக்கப்பட்டது. தகவலறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்த காவல்துறையினர், பொதுமக்களிடம் பேச்சுவார்த்தை நடத்தி, குற்றவாளிகளை விரைந்து கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளித்தனர்.தொடர்ந்துஅப்பகுதியில்பாதுகாப்புபலப்படுத்தப்பட்டு, காவல்துறையினர் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.



# 400 ஆண்டுகள் பழமையான வடகல்பாக்கம் ஸ்ரீ முனீஸ்வரர் ஆலயத்தில் மகா கும்பாபிஷேகம்

## திரளான பக்தர்கள் தரிசனம்

திருவண்ணாமலை மாவட்டம் செய்யாறு அருகே வெண்பாக்கம் தாலுக்காவுக்கு உட்பட்ட வடகல்பாக்கம் கிராமத்தில் அமைந்துள்ள சுமார் 400 ஆண்டுகள் பழமையான ஸ்ரீ முனீஸ்வரர் ஆலயத்தின் மகாகும்பாபிஷேகவிழா ஞாயிற்றுக்கிழமை பக்தி பரவசத்துடன் நடைபெற்றது.

பாலாற்றின் தென்கரையில் அமைந்துள்ள இவ்வாலயம் கிராம மக்களின் குலதெய்வமாக விளங்கி வருகிறது. அண்மையில் ஆலயம் முழுமையாகப் புதுப்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து, ஆகம விதிகளின்படி மகாகும்பாபிஷேகவிழா இரண்டு நாட்கள் சிறப்பு யாகங்கள் மற்றும் வேத மந்திரங்கள் முழங்க நடைபெற்றது.

விழாவின் முதல் நாளான சனிக்கிழமை மாலை கணபதி பூஜை, வாஸ்து சாந்தி ஹோமம், ரக்ஷா ஹோமம், ரக்ஷாபந்தனம், கலாகர்ஷணம், கும்ப அலங்காரம், யாக சாலை பிரவேசம் மற்றும் முதல் கால யாக பூஜைகள் நடைபெற்றன. பின்னர் பூர்ணாஹுதி மற்றும் மகா தீபாராதனையுடன் முதல் நாள் நிகழ்ச்சிகள் நிறைவடைந்தன.

ஞாயிற்றுக்கிழமை அதிகாலை இரண்டாம் கால யாகபூஜைகள் நடைபெற்றதைத் தொடர்ந்து, யாத்ராதானம் மற்றும் மகா தீபாராதனை நடைபெற்றது. பின்னர் கோபுர கலசம் மற்றும் மூலவர் ஸ்ரீ முனீஸ்வரர் பெருமானுக்கு வேத மந்திரங்கள் முழங்க மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. தொடர்ந்து மகா அபிஷேகம், சிறப்பு அலங்காரம், தீபாராதனை மற்றும் பக்தர்களுக்கு பிரசாதம் வழங்கப்பட்டது.

மாலை ஊரணி பொங்கல், சிறப்பு பூஜைகள், வாணவேடிக்கை மற்றும் கலாச்சார நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. குரும்பூர் ராஜேஸ்வரி நாடக மன்றத்தினரின் ஆன்மிக நாடகமும் பக்தர்களை வெகுவாகக் கவர்ந்தது. கும்பாபிஷேக விழாவை சிவஸ்ரீ அகோர சிவம் ஸ்ரீதர் சிவாச்சாரியார் தலைமையில் சிவாச்சாரியார்கள் ஆகம முறைப்படி நடத்தி வைத்தனர்.

இந்த விழாவில் வாழவந்தல், சோதியம்பாக்கம், மாமண்டூர், மண்ணூர், கீழ்நாயக்கன்பாளையம், மேனலூர் உள்ளிட்ட சுற்றுவட்டார கிராமங்களைச் சேர்ந்த ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர்.

# செண்பகத்தோப்பு அணையை உடனே தூர்வாருங்கள்

## மழைநீரை வீணாக்காதீர் என படைவீட்டில் கவன ஈர்ப்பு போராட்டம்

கண்ணமங்கலம் அருகே உள்ள படைவீட்டில் அமைந்துள்ள செண்பகத்தோப்பு நீர்த்தேக்க அணையை உடனடியாக தூர்வாரி சீரமைக்க வலியுறுத்தி, கமண்டல நாகநதி பாதுகாப்பு இயக்கம் சார்பில் ஞாயிற்றுக்கிழமை கவன ஈர்ப்பு போராட்டம் நடைபெற்றது.




இயக்கத்தின் தலைவர் முனைவர் அ.அமுல்ராஜ் தலைமையில் நடைபெற்ற இந்தப் போராட்டத்தில், அணையின் கரைப்பகுதியில் திரண்ட இளைஞர்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள், செண்பகத்தோப்பு அணையில் தற்போது மிகக்குறைந்த அளவிலேயே நீர் இருப்பதாகவும், அணையை தூர்வாராமல் விட்டதால் அதன் முழு கொள்ளளவில் மழை நீரை சேமிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர்.

மேலும், அணையை நம்பியுள்ள ஆரணி, களம்பூர், சந்தவாசல், ஏரிக்குப்பம் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள சுமார் 50 ஏரிகள் வறண்டுள்ளதுடன், சுமார் 6 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டுள்ள நெற்பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், படைவீடு மற்றும் சுற்றுவட்டாரத்தைச் சேர்ந்த 50க்கும் மேற்பட்ட கிராமங்களில் குடிநீர் தட்டுப்பாடு நிலவி வருவதாகவும் அவர்கள் கூறினர்.

தற்போது அணையில் நீர்மட்டம் குறைந்துள்ள நிலையில் தூர்வாரும் பணிகளை மேற்கொண்டால், வரவிருக்கும் வடகிழக்கு பருவமழை நீரை முழுமையாக சேமிக்க முடியும் என்பதால், தமிழக அரசு உடனடியாக நிதி ஒதுக்கி பணிகளை தொடங்க வேண்டும் என்று வலியுறுத்தினர்.

மேலும், கமண்டல நாகநதியில் கழிவுகள் கொட்டப்படுவதைத் தடுத்து நதியைப் பாதுகாக்க வேண்டும், நீண்டகாலமாக சேதமடைந்துள்ள செண்பகத்தோப்பு அணைக்கு செல்லும் சாலையை சீரமைக்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து முழக்கங்களை எழுப்பினர்.


இந்த கவன ஈர்ப்பு போராட்டத்தில் விவசாயி கருணாகரன், சமூக ஆர்வலர் அஞ்சலை, ராமசெயம், அரவிந்த், உலகநாதன், சுரேஷ், ரேணு உள்ளிட்டோர் கலந்து கொண்டு, அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்து செண்பகத்தோப்பு அணையை தூர்வார வேண்டும் என வலியுறுத்தினர்.

### ஓட்டப்பிடாரம் மேல மீனாட்சிபுரம் ஸ்ரீ பேச்சியம்மன் ஸ்ரீ சுடலை மாடசாமி கோவில் கொடை விழாவை முன்னிட்டு நடைபெற்ற

# தேன் சிட்டு மாட்டு வண்டி போட்டியில் வெற்றி பெற்ற வீரருக்கு வடக்கு ஒன்றிய தவெக செயலாளர் ATK. ஆறுமுக கிருஷ்ணன் ரு 21 ஆயிரம் பரிசு வழங்கினார்

ஓட்டப்பிடாரம் மேல மீனாட்சிபுரம் ஸ்ரீ பேச்சியம்மன் ஸ்ரீ சுடலை மாடசாமி கோவில் கொடை விழாவை முன்னிட்டு நடைபெற்ற தேன் சிட்டு மாட்டு வண்டி போட்டி அமைந்துள்ள ஸ்ரீ பேச்சியம்மன் ஸ்ரீ சுடலை மாடசுவாமி கோவில் கொடை விழாவை முன்னிட்டு நடைபெற்ற தேன்சிட்டு மாட்டுவண்டி போட்டிக்கான நிகழ்ச்சி வடக்கு டப்பிடாரம் வடக்கு ஒன்றிய செயலாளருமான AT.K. ஆறுமுக கிருஷ்ணன்,, தேன்சிட்டு மாட்டு வண்டி எல்கைப் பந்தயப் போட்டியை கொடியசைத்து துவக்கி





யில் வெற்றி பெற்ற வீரருக்கு வடக்கு ஒன்றிய தவெக செயலாளர் ATK. ஆறுமுக கிருஷ்ணன் ரு 21 ஆயிரம் பரிசு வழங்கினார்

தூத்துக்குடி மாவட்டம் ஓட்டப்பிடாரம் மேல மீனாட்சிபுரத்தில் ஒன்றிய தவெக செயற்குழு உறுப்பினர்கள் ராதா கிருஷ்ணன், ஜெயசீலன், ரவிக்குமார், ராபர்ட், சத்யராஜ்,பிரபாகர் , ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது இதில் பிரபல தொழிலதிபரும் தமிழக வெற்றிக்கழக ஓட்டப்பிடாரம் வடக்கு ஒன்றிய செயலாளருமான... வைத்து வெற்றி பெற்ற வீரருக்கு 21,000 பரிசு வழங்கினார்

இந்நிகழ்ச்சியில் ஓட்டப்பிடாரம் வடக்கு ஒன்றிய தமிழக வெற்றி கழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்





# என்.எம்.துரைசாமி 6ம் ஆண்டு நினைவு நாள் முதியோர்களுக்கு மதியஉணவு வழங்கல்

திருவள்ளூர் மாவட்டம் மாதவரம் தொகுதி செங்குன்றம் (நாரவாரிகுப்பம்) பேரூராட்சி முன்னாள் தலைவரும் செங்குன்றம் நெல் அரிசி வணிகர்கள்மற்றும்அரிசி ஆலை உரிமையாளர்கள் சங்கத்தின் முன்னாள் தலைவரும் மற்றும் திருவள்ளூர் ஒருங்கிணைந்த மாவட்ட முன்னாள் அவைத் தலைவருமான என். எம். துரைசாமியின் 6ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு புள்ளிலையன் ஊராட்சியில் உள்ள ஜீவ ஜோதி ஆதரவற்ற முதியோர் இல்லத்தில் உள்ள முதியோர்களுக்கு மதிய உணவு வழங்கும் நிகழ்ச்சி மருத்துவர் என்.எம்.டி. கோபால், பேரூராட்சி கவுன்சிலர் என்.எம்.டி.இளங்கோவன் ஆகியோர் ஏற்பாட்டில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளராக மாதவரம் சட்டமன்ற திமுக முன்னாள் எம்.எல். ஏவும் சென்னை வடகிழக்கு மாவட்டச் செயலாளருமான மாதவரம் எஸ். சுதர்சனம் கலந்து கொண்டு என்.எம். துரைசாமி உருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தி பின்னர் முதியோர்களுக்கு மதியஉணவினை வழங்கினார்.

இதில் திமுக நிர்வாகிகள் உள்ளிட்ட குடும்பத்தினர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

**இறப்புக்கு முன் ரத்த தானம்**
**இறப்புக்கு பின் கண் தானம்**



### செய்யாறில் வீதிகளில் சுற்றி திரியும் 74:

# சமூக நாய்களுக்கு வெறிநாய் தடுப்பு ஊசி

திருவண்ணாமலை மாவட்டம் செய்யாறில் வீதிகளில் சுற்றி திரியும் 74 சமூக நாய்களுக்கு நேற்று வெறிநாய் தடுப்பு ஊசி போடப்பட்டது. மாண்பமை உச்சநீதிமன்ற உத்தரவின்படி நகராட்சிப் பகுதிகளில் சுற்றித் திரியும் சமூக நாய்களுக்கு ஒவ்வொரு பகுதி வாரியாக வாரந்தோறும் சனிக்கிழமை நாட்களில் சிறப்பு முகாம் மூலம் வெறிநாய் தடுப்பு ஊசி செய்யாறு கால்நடை மருத்துவர் மற்றும் முதுநிலை கால்நடை மேற்பார்வையாளர் அடங்கிய குழு மூலம் போடப்படு வருகிறது. இதன் ஒரு பகுதியாக நேற்று 7, 8, 9, 14 ஆகிய வார்டுகளில் உள்ள 74 சமூக நாய்களுக்கு தடுப்பூசி போடப்பட்டது. இந்நிகழ்வில் நகராட்சி ஆணையாளர் சே.ஆண்ரூஸ் மற்றும் துப்புரவு ஆய்வாளர் கே.மதனராசன், களப்பணி உதவியாளர் மற்றும் தூய்மை பணியாளர்கள் உடன் இருந்தனர்.

# தமிழ்நாட்டின் ஏற்றுமதித் திறனை உயர்த்த மத்திய அரசு தீவிர நடவடிக்கை

## நாடாளுமன்றத்தில் திருவண்ணாமலை எம்பி சி.என்.அண்ணாதுரை, கேள்விக்கு அமைச்சர் பதில்

இந்தியாவின் ஏற்றுமதி வளர்ச்சியை விரைவுபடுத்துவதற்கும், மாநிலங்களின் தொழில்சார் பங்களிப்பை அதிகரிப்பதற்கும் மத்தியஅரசுபல்வேறு உத்திகளை வகுத்து செயல்பட்டு வருகிறது.

நாடாளுமன்ற மக்களவையில், திருவண்ணாமலை தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் சி.என். அண்ணாதுரை, நாட்டின் ஏற்றுமதி வளர்ச்சி மற்றும் தமிழ்நாட்டின் தொழில் மையங்களை ஊக்குவிப்பது தொடர்பான முக்கிய கேள்விகளை எழுப்பினார்.

அவரது கேள்விகளுக்குப் பதிலளித்துப் பேசிய வர்த்தகம்மற்றும்தொழில் துறை அமைச்சகத்தின் இணை அமைச்சர், "இந்தியாவின் ஏற்றுமதியை கணிசமாக உயர்த்தும் நோக்கில் துறை சார்ந்த புதிய வாய்ப்புகளைக் கண்டறிவதற்கும், வர்த்தக ரீதியிலான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கும் ஏற்றுமதி மேம்பாட்டுக் கவுன்சில்கள் (EPCS), பல்வேறு தொழில் சங்கங்கள், மாநில அரசுகள் மற்றும் பங்குதாரர்களுடன் மத்திய அரசு தொடர்ந்து ஆலோசனைகளை நடத்தி வருகிறது" என்று தெரிவித்தார். முன்னதாக, தமிழ்நாட்டின் பிரத்யேக துறைகளான ஜவுளி மற்றும் ஆடைகள், தோல் பொருட்கள், பொறியியல் சாதனங்கள், ஆட்டோமொபைல் மற்றும் வாகன உதிரிபாகங்கள், எலக்ட்ரானிக்ஸ், கடல்சார் பொருட்கள் மற்றும் குறு, சிறு, நடுத்தரத் தொழில்கள் (MSME) ஆகியவற்றின்ஏற்றுமதிவாய்ப்புகளை மேம்படுத்துவது குறித்து எம்பி சி.என். அண்ணாதுரை கேள்வி எழுப்பியிருந்தார். மேலும், மாநிலத்தில் உள்ள தொழில்சார் மையங்களின் (INDUSTRIAL CLUSTERS) போட்டித் தன்மையை அதிகரிக்கவும்,துறைமுகஇணைப்பு வசதிகளை மேம்படுத்தி தளவாடச் செலவுகளைக் (LOGISTICS COSTS) குறைக்கவும், ஏற்றுமதி நடைமுறைகளை எளிதாக்கி மாவட்ட அளவிலான ஏற்றுமதி மேம்பாட்டுத் திட்டங்களைச் செயல்படுத்தவும் மத்திய அரசு எடுத்து வரும் நடவடிக்கைகள் குறித்து விரிவாகக் கேட்டறிந்தார்.





**தமிழ்நாடு மின்சார வாரியம்பழநி கோட்டத்திற்குட்பட்ட 110/22 கிலோ வாகரை துணை மின் நிலையத்தில் எதிர்வரும் 04.08.2026ம் தேதியன்று பராமரிப்பு பணி நடைபெற இருப்பதால் அன்று காலை 9.00 மணி முதல் மதியம் 4.00 மணி வரை வாகரை துணை மின் நிலையத்தில் இருந்து மின் விநியோகம் பெறும் பகுதிகளான வாகரை, மரிசிலம்பு, பூலாம்பட்டி, திருவாண்டபுரம், கஞ்சிக்காளியவலசு, அப்பனுத்து, தொப்பம்பட்டி, வேலாம்பட்டி, ஆலாவலசு, புங்கமுத்தூர், மேட்டுப்பட்டி, வேப்பன்வலசு, பூசாரிகவுண்டன் வலசு.ஆகிய பகுதி களுக்கு மின் விநியோகம் நிறுத்தப்படும் என்பதை தங்களின் நாளிதழ் மற்றும் தொலைக்காட்சியில் அறிவிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது.**



# ராகுல் காந்தி தமிழகத்தில் கால்வைத்ததும் காவிரி தண்ணீர் தமிழகத்திற்கு வந்து விட்டது: மாணிக்கம் தாகூர்

ராகுல் காந்தி தமிழகத்தில் கால்வைத்ததும் காவிரி தண்ணீர் தமிழகத்திற்கு வந்து விட்டது என மாணிக்கம் தாகூர் கூறியுள்ளார்.

சென்னையில் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் மாணிக்கம்தாகூர் செய்தியாளர் சந்திப்பில் கூறியதாவது;

கர்நாடக முதல்மந்திரி டி.கே.சிவக்குமார் கர்நாடகாவிற்காகத்தான் பேசுவார். அவருக்கு தமிழ்நாட்டின் நலன் முக்கியமல்ல. எனக்கு தமிழ்நாடு நலன்தான் முக்கியம் முதல்அமைச்சர் விஜய் கர்நாடகாவிற்கு சென்று பேச்சுவார்த்தை நடத்தினால் தவறு இல்லை என்று நினைக்கிறேன். தமிழ்நாட்டிற்கு எப்படியாவது தண்ணீர் வர வேண்டும்.

தமிழ்நாடும் கர்நாடகாவும் இந்தியா பாகிஸ்தான் கிடையாது. பேசி தீர்க்கும் நிலையை உருவாக்க வேண்டுமென முதல்அமைச்சர் விஜய் நினைப்பதே பாராட்டுக்குரிய விஷயம். இரு மாநில முதல்மந்திரிகளும் பேச்சுவார்த்தை நடத்துவது நல்லது. காவிரி விவகாரத்தில் கர்நாடகத்தில் அனைத்துக் கட்சிகளும் ஒற்றுமையாக உள்ளனர்.

தமிழ்நாட்டில் உள்ள அரசியல் கட்சிகளுக்கு காவிரி முக்கியம் இல்லை. அரசியல் செய்வதுதான் முக்கியமாக உள்ளது.

தொகுதி மறுவரையறை

மத்தியஅரசின்தொகுதி மறுவரையறையை அனைத்துக் கட்சிகளும் எதிர்க்க வேண்டும். திமுக கூட்டணியை விட்டு விலகினாலும் தொகுதி மறுவரையறை பிரச்சனையில் காங்கிரஸ் மாறவில்லை. தொகுதி மறுவரையறையை எதிர்த்து முன்பு நகலை எரித்தது யார்? பட்டாசு வெடித்தது யார்?. தொகுதி மறுவரையறையில் எட்டப்பர்கள் பாஜக, அதிமுக, பாமக தான். துரோகம் செய்வோரே எட்டப்பர்கள். ராகுல்அதைத்தான் குறிப்பிட்டார். தொகுதி மறுவரையறை தமிழகத்துக்கு மிகவும் முக்கியமானது.

"நம்பிக்கையை யார் விற்கிறார்கள் என்பது அடுத்த வாரம், 17ஆம் தேதி தெரிந்துவிடும். வாய் வசனம் பேசுவதை தயாநிதி மாறன் நிறுத்த வேண்டும். மக்கள் இதன் காரணமாகவே உங்களை உட்கார வைத்திருக்க வேண்டிய இடத்தில் உட்கார வைத்திருக்கிறார்கள்.

தமிழகத்தை நோக்கி வந்த காவேரி

தமிழ்நாட்டின் மீது அக்கறை இல்லாமலையா ராகுல் காந்தி இங்குவந்து பேசிவிட்டு சென்றிருக்கிறார். தொகுதி மறுவரையறை, தமிழ்நாட்டிற்கு எவ்வளவு பெரிய பிரச்சினை அது குறித்து பேசியுள்ளார்.

ராகுல் காந்தி வந்த நேரம் மழை பெய்தது. அதன் காரணமாக தமிழ்நாட்டிற்கு, கர்நாடகாவில் இருந்து தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது. ராகுல் காந்தி தமிழகத்தில் கால்வைத்ததும் காவிரி தண்ணீர் தமிழகத்திற்கு வந்து விட்டது எனத் தெரிவித்தார்.

# 'இளைய தலைமுறையினர் என்ன மாற்றத்தை விரும்புகிறார்கள் என்பதை கணிக்க முடியவில்லை' திருமாவளவன்

மதுரையில் 'ஜனநாயகம் காப்போம் 2026' என்ற பெயரில் நடைபெற்ற மாணவர்கள் நாடாளுமன்றம் நிகழ்ச்சியில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திருமாவளவன் கலந்து கொண்டு பேசினார். அப்போது அவர் கூறியதாவது;

"இப்போது புதிய இளைய தலைமுறையினரைஜென்ஸி(GenZ)தலைமுறை என்று அழைக்கிறார்கள். அவர்கள் எதை விரும்புகிறார்கள், என்ன மாற்றத்தை விரும்புகிறார்கள் என்பதை முன்கூட்டியே யூகிக்க முடியவில்லை, கணிக்க முடியவில்லை. தலைவர் ஒருவர் அழைப்பு விடுக்கா மலேயே அமைப்பு ஒன்று உருவாகாமலேயே லட்சக்கணக்கில் திரளும் உளவியல் பொது உளவியலாக வளர்ந்திருக்கிறது.



ஜல்லிக்கட்டு புரட்சிக்கு எந்த ஒரு அமைப்பும் பொறுப்பேற்க முடியாது. நாங்கள்தான் இதை ஒருங்கிணைத்தோம் என்று எந்த ஒரு தலைவரும் பொறுப்பேற்க முடியாது.

ஆனால் லட்சக்கணக்கானவர்கள் பல நாட்கள் மெரினாவில் கூடியது நம்மையே உலுக்கி எடுத்தது. ஒரு அரசையே பணிய வைத்தது. ஜல்லிக்கட்டுக்கு விதிக்கப்பட்ட தடையை திரும்பப் பெற வைத்தது. ஜல்லிக்கட்டுக்கான உரிமையை நாம் வென்றெடுத்தோம். நாம் வென்றெடுத்தோம் என்று ஒவ்வொருவரும் உரிமை கோரிக் கொள்ளலாம், ஆனால் நான்தான் ஒருங்கிணைத்தேன் என்று யாரும் சொல்ல முடியாது. அப்படி ஒரு புரட்சியை இளைய தலைமுறையினர் தமிழ் மண்ணில் நிகழ்த்திக் காட்டியதைப் போல், தலைநகர் டெல்லியில் ஒரு அமைப்பு போராட்டத்திற்கு அழைப்பு விடுத்தது என்றாலும் கூட, அந்த அமைப்பு முறைப்படி வடிவமைக்கப்பட்ட அரசியல் அமைப்பு அல்ல.

சுப்ரீம் கோர்ட்டு நீதிபதி ஒருவர் வாய் தவறி 'கரப்பான்பூச்சிகள்' என்று சொல்லப் போக, 'எங்களைப் பார்த்து கரப்பான்பூச்சி என்று சொல்கிறீர்களா? இதோ நாங்கள் வந்துவிட்டோம் என்று டெல்லியை நோக்கி சாரை சாரையாய் கிளம்பிச் சென்று தலைநகரையே திணற வைத்தார்கள். இந்திய அரசு பணிந்தது. மத்திய கல்வி மந்திரி தர்மேந்திர பிரதான் பதவி விலகினார். இது இந்த தலைமுறையினர் நிகழ்த்திக் காட்டியிருக்கும் ஒரு புரட்சி."

இவ்வாறு அவர் தெரிவித்தார்.



# நாக்பூரில் தமிழக விவசாயிகள் கைது உதயநிதி ஸ்டாலின் கண்டனம்

நாக்பூரில் கைது செய்யப்பட்டுள்ள நம் விவசாயிகளை உடனே விடுவிக்க தமிழ்நாடு முதல் அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென எதிர்க் கட்சித்தலைவர் உதயநிதி ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார். இது தொடர்பாக அவர் தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டு இருப்பதாவது; "மேகதாது அணை கட்டுவதைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்று டெல்லியில் முற்றுகைப் போராட்டம் நடத்துவதற்காக ரயிலில் சென்ற தமிழ்நாட்டு விவசாயி களை நாக்பூரில் கைது செய்துள்ள மகாராஷ்டிரா மாநில காவல்துறையை வன்மையாகக்கண்டிக்கிறேன். மேகதாது விஷயத்தில் தொடக்கம் முதலே கர்நாடகாவுக்கு ஆதரவாக ஒருதலைபட்சமாக செயல்படும் நீர்வளத்துறையின் போக்கை கண்டித்துதான் தமிழ்நாட்டு விவசாயிகள் முற்றுகைப் போராட்டத்தை அறிவித்தனர். ஆனால், அவர்கள் ரயிலில் சென்று கொண்டிருக்கும் போதே நடுவழியில் இறங்க வைத்து, தமிழ்நாட்டுக்கே திரும்பிச் செல்லுங்கள் என கட்டாயப்படுத்தி உள்ளது மகாராஷ்டிர காவல்துறை. நாக்பூரில் கைது செய்யப்பட்டுள்ளநம்விவசாயிகளைஉடனேவிடுவிக்கதமிழ்நாடு முதலமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும். நம் விவசாயிகளை கைது செய்த மகாராஷ்டிர அரசிடம் அதற்கான விளக்கத்தைக் கேட்பதுடன், இனி இது போன்ற சம்பவங்கள் நடக்காமல் இருப்பதற்கான உறுதியைப் பெற வேண்டும். டெல்லி சென்று போராட அவர்களை மத்திய அரசு அனுமதிக்க வேண்டும். ஜனநாயக வழியில் போராடும் உரிமையைப் பறிக்கக் கூடாது." இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# கும்பகோணத்தில் 40 ஆண்டுகளுக்கு பிறகு வாய்க்கால் தூர்வாரும் பணியை தொடங்கிவைத்த அமைச்சர் வினோத்


கும்பகோணம் வட்டம்மாங்குடியில்பழைய தேப்பெருமாநல்லூர் வாய்க்கால் தலைப்பில் 40 ஆண்டுகளுக்குப் பிறகு வேளாண்மை துறைஅமைச்சர்வினோத் தூர்வாரும் பணியை தொடங்கி வைத்தார்.

கும்பகோணம் வட்டம் பேட்டை வடக்கு தெருவில் காவேரி ஆற்றில் இருந்து பழவத்தான் கட்டளை வாய்க்கால் பிரிகின்றது அந்த வாய்க்காலில் இருந்து பழைய தேப்பெருமாநல்லூர் வாய்க்கால் பிரிந்து சுமார் 12 கிலோமீட்டர் பயணித்து செட்டிமண்டபம் ஐந்து தலைப்பு வாய்க்காலில் கலந்து, பின்னர் பாசன வாய்க்காலாக செல்கிறது.

இந்த நிலையில் பழைய தேப்பெருமாநல்லூர் வாய்க்காலில் சுமார் 40 ஆண்டுகளுக்கு மேலாக பல்வேறு காரணங்களால் தூர் வாராமல் போனது. இதனால் பல பகுதிகள்தூர்ந்து ஆக்கிரமிக்கப்பட்டு வாய்க்கால் இருக்கும் தடம் அழிந்து தெரியாமல் போனது.

இதனால் மழைக்காலங்களில் வாய்க்காலில் மழை நீர் செல்லாமல் பக்கவாட்டில் உள்ள வயல்கள், குடியிருப்புகள், வணிகநிறுவனங்களுக்குள் மழை நீர் புகுந்து பெறும் சிரமத்தை ஏற்படுத்தியது.

இதை தொடர்ந்து சமூக ஆர்வலர்கள், வேளாண்மை துறை அமைச்சர் வினோத்திடம், கும்பகோணத்திற்குள் செல்லும் வாய்க்கால்களை உள்ள ஆக்கிரப்புகளை அகற்றி, தூர்வாரி, காவிரி நீரை விட வேண்டும் என கோரிக்கை விடுத்திருந்தனர். இதைத்தொடர்ந்து சிட்டி யூனியன் வங்கி சமூகப் பொறுப்புணர்வு திட்ட நிதியின் கீழ் பழைய தேப்பெருமாநல்லூர் வாய்க்கால் தூர்வார முடிவு செய்யப்பட்டது.



அதன்படி, வேளாண்மை துறை அமைச்சர் வினோத் அந்த வாய்க்காலில் தூர் வாரும் பணியினை நேற்று தொடங்கி வைத்தார்.

அவருடன் நீர்வளத்துறை உதவி செயற் பொறியாளர் முத்துமணி, உதவி பொறியாளர் கார்த்திகேயன், தமிழக வெற்றி கழக வடக்கு மாவட்ட செயலாளர் நிஜாமூதீன், மாநகர செயலாளர் முருகானந்தம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இது தொடர்பாக நீர்வளத் துறை அதிகாரிகள் கூறியது; பல ஆண்டுகளுக்கு பிறகு பழைய தேப்பெருமாநல்லூர் வாய்க்கால் நீர்வளத் துறை பொக்லின் இயந்திரம் மூலம் தூர்வாரப்படுகிறது. இந்த வாய்க்கால் மூலம் கும்பகோணம் நகருக்குள் காவிரி நீர் செல்லும். அதனால் மாநகர பகுதிகளில் நிலத்தடி நீர் மட்டும் உயர வாய்ப்புள்ளது. மேலும் 500 ஏக்கர் நிலங்களுக்கு பாசனத்திற்கும், மழைக்காலங்களில் மழை நீர் கடைமடை வரை தடையின்றி செல்லும். மாங்குடியில் இருந்து கும்பகோணம் மாநகரம் கரும்பாயிரம் கொண்ட விநாயகர் கோயில் தெரு வரை நீர்வளத்துறை கட்டுப்பாட்டில் உள்ள 8 கி.மீ.தூரத்திற்கு முதற்கட்டமாக தூர்வாரப்படும். அதன் பின் மாநகராட்சி சார்பில் தூர்வார வேண்டும். இந்த பணி 20 நாட்களில் நிறைவடை என எதிர்பார்க்கப்படுகிறது என்றனர். வேளாண்மை துறை அமைச்சர் வினோத்திடம், திருப்பதியில் நிதி நிலை அறிக்கை வைத்து வழிபட்ட தொடர்பாக ஏற்பட்ட சர்ச்சையை குறித்து கேள்வி கேட்டதற்கு, பட்ஜெட் இருக்கிறது எனபதில்கூறமறுத்து அங்கிருந்து புறப்பட்டு சென்றார்.

# கர்நாடக முதல்வருடன் திமுகவுக்கு ரகசிய உடன்பாடு

## அமைச்சர் நிர்மல் குமார்

"காங்கிரஸ் தலைமை சொல்வதை கேட்பதை விட, திமுக குடும்பம் சொல்வதையே கர்நாடக முதல்வர் டி.கே.சிவகுமார் கேட்கிறார். கர்நாடக முதல்வர் டி.கே.சிவகுமாருடன் திமுகவுக்கு ரகசிய உடன்பாடு உள்ளது" என தமிழக சட்டத்துறை அமைச்சர் நிர்மல் குமார் குற்றம் சாட்டினார்.



சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய நிர்மல் குமார், "திமுகவுக்கும், கர்நாடக முதல்வர் டி.கே. சிவகுமாருக்கும் இடையே நல்ல உறவு உள்ளது. அவர்கள் இருவரும் கலந்தாலோசித்துதான் இவையெல்லாம் செய்கிறார்களா என்று சந்தேகம் எழுகிறது. டி.கே.சிவகுமார் திமுக ஆட்சிக்கு வரவேண்டும் என விரும்பினார். காங்கிரஸ் தலைமை சொல்வதை கேட்பதை விட, திமுக குடும்பம் சொல்வதையே சிவகுமார் கேட்கிறார் என பல தரப்பினரும் சொல்லி வருகின்றனர்.

ஏனெனில், திமுக என்ன நினைக்கிறதோ, அதையேதான் டி.கே.சிவகுமாரும் பேசி அதற்கான நடவடிக்கைகளை எடுக்கிறார்.

அவர்களுக்குள் நல்ல உறவு உள்ளது.

இவர்கள் இருவரும் இதுபோலவே, தண்ணீர் திறந்துவிட்டால்ஜெயலலிதாவுக்குநல்லபெயர்கிடைத்துவிடும் என கருணாநிதி காலத்தில் முட்டுக்கட்டை போட்டனர். அதையே தான் திமுக இப்போதும் செய்கிறது. அதன்படியே முதல்வர் விஜய் தனிமைப்பட்டு நிற்கிறார் என ஸ்டாலின் சொல்கிறார். தமிழக மக்களுக்கு பின்னடைவை ஏற்படுத்த வேண்டும் என்றுதான் ஸ்டாலின் இது போல சொல்கிறார்.

இதன் மூலமாக டி.கே.சிவகுமாருக்கும், திமுகவுக்கும் உள்ள உறவு வெட்ட வெளிச்சமாகிறது. இது போன்ற தரம் தாழ்ந்த நடவடிக்கைகளை நிறுத்த வேண்டும். தமிழக மக்கள் உரிமையைக் காக்க நாளை உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசு வழக்குப் பதிவு செய்ய உள்ளது. கடந்த 30 ஆண்டுகளாக எல்லா வகையிலும் காவிரி விவகாரத்தில் பின்னடைவை ஏற்படுத்தியது திமுகவும், கருணாநிதியும் தான். முதல்வரை நெருக்கடிக்குள்ளாக்கவும், அவருக்குச் சிக்கலை ஏற்படுத்தவும் திமுக நினைக்கிறது; ஆனால் அதே வேளையில், காவிரி விவகாரத்தில் இது தமிழக மக்களுக்குப் பின்னடைவாக அமையும் என்பதை திமுக உணரவில்லை" என்றார்.

# ஊர்க்கூடி தேர் இழுத்த கிராம மக்கள்: வன்னியரசு பாராட்டு

ஊர்க்கூடி தேர் இழுத்த கிராம மக்கள்; வன்னியரசு பாராட்டு இது தொடர்பாக, தமிழக சமூக நீதித் துறை அமைச்சர் வன்னியரசு பதிவிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் கூறப்பட்டுள்ளதாவது:

ஆடி மாத தேர் திருவிழா

கள்ளக்குறிச்சி மாவட்டம், சங்கராபுரம் வட்டம் பூட்டை கிராமத்தில் அமைந்துள்ள பிரசித்தி பெற்ற அருள்மிகு பூட்டை மாரியம்மன் கோவில் ஆடி மாத தேர் திருவிழா நேற்று (01.08.26) வெகு சிறப்பாக நடைபெற்றது.



தேரோட்டம்

பூட்டை கிராம மக்களின்அழைப்பின்பேரில், தேர் திருவிழாவில் பங்கேற்று, ஜாகிர்தார்களுடன் இணைந்து தேரை வடம் பிடித்து இழுத்துதேரோட்டத்தை தொடங்கி வைத்தோம்.

பக்தர்கள் பங்கேற்பு

அனைத்து சமூகத்தினருக்கும் தேரோட்டம் பொதுவாக நடைபெற வேண்டுமென சட்டப் போராட்டம் நடைபெற்ற காலங்கள் முன்னர் இருந்ததுண்டு. இன்று அனைத்து தரப்பு மக்களும் இணைந்து தேரோட்டத்தை சிறப்பாக முன்னெடுத்து செல்லும் சமூக நல்லிணக்கம் உருவாகி இருப்பது குறிப்பிடத்தக்கது. கள்ளக்குறிச்சி மாவட்டம் முழுவதிலிருந்து திரளான பக்தர்கள் கோவில் தேரோட்டத்தில் பங்கேற்று சிறப்பித்தனர்.

பாதுகாப்பு

இந்து சமய அறநிலையத்துறையின் ஒருங்கிணைப்பு பாராட்டத்தக்கதாய் அமைந்திருந்தது. கள்ளக்குறிச்சி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் செஹனாஸ் இலியாஸ் முன்னின்று தேரோட்டத்துக்கு பாதுகாப்பு வழங்கினார்.

பங்கேற்றனர்

இந்நிகழ்வில் சங்கராபுரம் சட்டமன்ற உறுப்பினர் திரு. ராகேஷ், பாட்டாளி மக்கள் கட்சியின் கள்ளக்குறிச்சி மேற்கு மாவட்ட செயலாளர் பப்லு, விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சங்கராபுரம் தொகுதி மாவட்ட செயலாளர் இல. சிலம்பன் உள்ளிட்ட பல்வேறு கட்சிகளின் நிர்வாகிகளும் உடன் பங்கேற்றனர்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# "கர்நாடகாவில் காங்கிரஸ் ஆட்சிக்கு வரும் போதெல்லாம் தமிழகம் வஞ்சிக்கப்படுகிறது" நயினார் நாகேந்திரன்

"கர்நாடகாவில் காங்கிரஸ் எப்பொழுதெல்லாம் ஆட்சிக்கு வருகிறதோ அப்பொழுதெல்லாம் தமிழக விவசாயிகள் வஞ்சிக்கப்படுகிறார்கள். காவிரி நீர் பிரச்சினை மட்டுமா, கச்சத்தீவை தாரை வார்த்து மீனவர்களுக்கும் துரோகம் இழைத்த கட்சி தானே காங்கிரஸ்" என தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், "மொட்டை தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சு போடாதீர்கள்மாணிக்கம்தாகூர். நமது பிரதமர்மோடி ஆட்சிக்கு வந்த பிறகு தான், கடந்த 2018ல் காவிரி நீர் மேலாண்மை ஆணையம் அமைக்கப்பட்டது என்பது உங்களுக்கு தெரியுமா, தெரியாதா?.

மத்திய பாஜக அரசு அமைத்த ஆணையம் தண்ணீரை வழங்குமாறு கர்நாடக அரசிற்கு உத்தரவிட்டாலும் கூட, அதிகாரத்தை கையில் வைத்திருக்கும் உங்கள் காங்கிரஸ் கட்சி, தமிழகத்திற்கு தண்ணீர் தர மறுத்துவிட்டது என்பது ஊரறிந்த விஷயம். இதில் மத்திய பாஜக அரசின் மீது நீங்கள் பழிபோடுவது மக்களை ஏமாற்றும் செயல்.

எனவே, காவிரி நீர் மேலாண்மை ஆணையம் கூறிய பிறகும் கூட தமிழகத்திற்கு உரிய காவிரி நீரை திறந்து விடாமல் இழுத்தடித்த உங்கள் கர்நாடக காங்கிரஸை முடிந்தால் கேள்வி கேளுங்கள். தமிழக முதல்வரை சந்திக்க வருமாறு கூறிவிட்டு, பின்பு சாக்குபோக்கு சொல்லி கதவை சாற்றி, அவமானப்படுத்தியது ஏன் என உங்கள் கட்சியின் கர்நாடக முதல்வருக்கு முடிந்தால் கண்டனம் தெரிவியுங்கள்.

தமிழக விவசாயிகளின் வயிற்றில் அடிப்பது போல, மேகேதாட்டு அணையைக் கட்டியே தீருவோம் என பிடிவாதம் பிடிக்கும் உங்கள் சொந்த அரசிடம், அத்திட்டத்தை கைவிடுமாறு முடிந்தால் எடுத்துக் கூறுங்கள். அதை விட்டுவிட்டு வீண் விவாதம் வேண்டாம்.

தமிழகத்திற்கு வந்த உங்கள் கட்சி தலைவர் ராகுல் காந்தி, தற்போது தமிழகத்தில் பற்றி எரியும் காவிரி நீர் பிரச்சினை குறித்து ஒரு வார்த்தை கூட பேசாமல் திரும்பி சென்றதில் இருந்தே தெரிகிறது, காங்கிரஸ் காரர்களுக்கு தமிழகத்தின் மீதுள்ள அக்கறை.

கர்நாடகாவில் காங்கிரஸ் எப்பொழுதெல்லாம் ஆட்சிக்கு வருகிறதோ அப்பொழுதெல்லாம் தமிழக விவசாயிகள் வஞ்சிக்கப்படுகிறார்கள். காவிரி நீர் பிரச்சினை மட்டுமா, கச்சத்தீவை தாரை வார்த்து மீனவர்



களுக்கும் துரோகம் இழைத்த கட்சி தானே காங்கிரஸ். எனவே, தமிழக நலனைப் பற்றி நீங்கள் எங்களுக்கு பாடம் எடுக்க வேண்டாம். தமிழகத்தின் உரிமையை பாதுகாப்பதில் பாஜக என்றுமே தெளிவான நிலைப்பாட்டில்தான் உள்ளது. " எனத் தெரிவித்துள்ளார்.

Printed by S.BALASUBRAMANIAN and Published by M.VEERAMANI on behalf of M.VEERAMANI, Printed at "SANKARJI COMPUTER GRAPHICS PRINTER", No. 8/31, Seegampatty, K.Pudupatty (Post), Kulithalai (Taluk) Karur (District) - 639 105, Published At No. 1080. Kattupatti Road. Viralimalai (Taluk), Pudukkottai (District)-621316 EDITOR: GRAJA